Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௯] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ௵ மார்கழி ௴ ௨௬ ௳ வெள்ளிக்கிழமை (10 JAN 1958) [இல-௩அ]

## மட்டுவில் சிவன்கோயில் மகிமை

---o-o---

### சந்திரமௌலீசர் சந்நிதி தரிசனப் பயன்

ஈழநாட்டில் பல சிவஸ்தலங்கள் உண்டு. இச்சிவஸ்தலங்களில் இருக்கும் சிவலிங்கங்களுள் காலத்தால் மூந்தியது மட்டுவில் சிவன்கோயில் என வழங்கும், சந்திரமௌலீசப் பெருமான் கோயிலில் எழுந்தருளியிருக்கும் தைவிக மகாலிங்கமாகும்.

இத்தைவிக மகாலிங்கமானது ஈழநாட்டிற்கு வந்த வரலாற்றைச் சிறிது கூறி அதன் மகத்துவத்தை ஆராய்வாம். உலகப் பிரசித்திபெற்ற இமயமலையின் தென்பாகத்திலே திருக்கேதாரம் என்றொரு தலமுண்டு. இது ஆறுமாத காலம் மிகக் கடினமான பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். அதன்பின் ஆறுமாத காலம் உஷ்ணமாயிருக்கும். இக்காலத்திற்றான் மனிதர்கள நாடோறும் அங்கே சென்று பூசித்து வருவார்கள். இத்தகைய திருக்கேதாரம் ஓர் ஒப்பற்ற தெய்வீக தலமென்க.

இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னே சோழ மகாராசாவின் புத்திரன் ஒருவன் சமஸ்கிருதம் படிகக உத்தரதேசத்திற்குச் சென்றான். அவன் அங்கே படித்த படிப்பை முடித்துக்கொண்டு சோழநாட்டிற்குத் திரும்பும்போது, திருக்கேதாரத்திற்குச்சென்று சுவாமி தரிசனஞ் செய்தான். அவன் அத்தலத்தில்ஆசைமிகுந்து அன்பு கூர்ந்து அதை விட்டுப் பிரிய மனமில்லாதவனாய்ச் சிலமாதமிருந்து புறப்படும்போது மன்மதனாற் பூசிக்கப்பெற்ற தைவிக மகாலிங்கப் பெருமானை எடுத்துக்கொண்டு தன் வீடு வந்து சேர்ந்து ஒரு சிறு கோயில்கட்டி அம மகாலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வணங்கி ஆறுதலடைந்தான் இஃது இவ்வாறிருக்க,

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியி லிருந்த மழவராயனென்பவன் யாழ்ப்பாணம் அரசின்றிச் சீரழிவதைக் கண்டு, ஓர் அரசிளங்குமரனைத் தேடிச் சோழநாட்டிற்குச் சென்றான். அங்கே சோழ மகாராசாவைக் கண்டு பேசியபின்னர் சோழமகாராசா தன குமாரனான இராசகுமாரனை மழவராயனேடு யாழ்ப்பாணம் நல்லூருககு அனுப்பி வைத்தான். அவன் நல்லூரை இராசதானியாகக்கொண்டு, ஒரு சிவாலயங்கட்டத் தீர்மானஞ் செய்தான். இப்போதிருக்கும் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு மேற்காகக் கோயிலைக்கட்டி முடித்து திருக்கேதாரத்திலிருந்து கொணர்ந்த சிவலிங்கப் பெருமானைச் சோழநாட்டினின்று எடுப்பித்து கைலாசநாதர் கைலாசநாயகி" எனும் நாமங்களோடு பிரதிஷ்டை செய்வித்தான். பின் பறங்கிக்காரர்களால் இவ்வாலயம் அழிக்கப்படுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன் குருக்கள் நடுநடுங்கிக் கண்ணீர் விட்டழுது, இந்த மகாலிங்கத்தைப் பாதுகாப்பதற்காகப் பனை மட்டைப் படலமைத்துத் தென்னைமரச் சிற்றுருளை பூட்டி ஒரு வண்டியிலே அர்த்த யாமத்தில் மகாலிங்கப் பெருமானையும் தேவியையும் எடுத்து வைத்து — மட்டுவில் என்னும்தமதூருக்குக் கொண்டு போகக் கருதி — அவ்வண்டியை இழுக்க, பாரம மிகுந்து இழுக்க முடியாமையினல் — தேவி உருவத்தை இறக்கிக் கோயிலின் தீர்த்தக்கிணற்றுள்ளே இறக்கிவிட்டு—சிவலிங்கத்தைமாத்திரம் விரைவாக வண்டியுடன் இழுத்துக் கொண்டு போய் அதிகாலைக்கு முன் மட்டுவில் சேர்ந்தார். அங்கு செங்கற் றிருப் பணியால் செய்த ஒரு பழைய சிவாலயம் இருந்தது அச்சிவாலயத்தின் திருமஞ்சனக் கிணற்றுள் ஒருவரும் அறியாதபடி சிவலிங்கத்தை இறக்கிவிட்டுச் சென்றனர். பின் பறங்கிபர்களின் ஆட்சிக்காலம் ஒழிய, ஆலயத்தைப் புதுக்குவித்துக் கும்பாபிடேகம் செய்யும்நேரத்தில் சொப்பனுவத்தையில் இறைவன் அருளியபடி அவ்விலிங்கத்தை யெடுத்து சந்திர மௌலீசர் சாந்த நாயகி, என் னும் திருநாமங்களுடன் பிரதிட்டை செய்வித்தனர். அன்று முதல் மட்டுவில் என வழங்கிய ஊர் சந்திரபுரம் எனவும் வழங்கலாயிற்று. இத்தலத்தின் மகாலிங்கம் மிகப் புராதீனமானதும்பெருமை வாய்ந்ததுமாகும். ஸ்ரீலஸ்ரீ வேற்பிள்ளைபபுலவர் தமது குலதெய்வமா[illegible] இத்தலமீது ச[illegible] உள்ளார். இன்னும் அவர் குடும்பத்தினர்களான தவயோகினி ஸ்ரீமதி பார்வதியம்மையார், ஸ்ரீமத் சிவபாதசுந்தரனுர் பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை போன்றவர்களும் தென்மராட்சிப் பிரிவிலுள்ள சைவர்கள் எல்லோரும் சென்று வழிபடும் தலமாய் இது அமைந்தது. கோயிலுக்கு முன்னல் ஓர் திருக்குளம் இருக்கிறது. இது மிகவும் விசேடமானது. இதிலேதீராநோயாளிகளும் தீர்த்தமாடிச் சுகம் பெற்றார்களென்ப. இத்தகைய பெருமை வாய்ந்த தலம் விசேட உற்சவங்கள் இல்லாமலிருக்கின்றது. இதன் பெருமையை அறியாமற் பலர் இருக்கிறார்கள் ஆதலால் யாழ்ப்பாணச் சைவ மக்கள் எல்லோரும் இத்தலத்திற் செய்யவேண்டிய திருப்பணியைச் செய்து விசேட உற்சவாதிகளை நடைபெறச் செய்து திருவருட் பேறு பெற்றுய்க திருக்கேதார தரிசனப் பலன் இங்கே பெறலாகின்றதென்பது இங்கே சிந்திக்கத் தக்கது.

சாந்தநாயகி சமேத சந்திர மௌலீசர் திருவடி வாழ்க.

— செ. கோ. —

## இன்பப் பொங்கல்

இசைப்புலவர் சி. செல்லத்துரை

இன்பப் பொங்கல் வருகுதடா
இதயம் மகிழ்ச்சி பெருகுதடா
துன்பம் நீங்கி ஒழியுதடா
சுகமும் பொங்கி வழியுதடா

மங்கள வாழ்வு தோன்றுதடா
மந்திரஞ் செபந்தவ மோங்குதடா
எங்கள் தமிழ்வளந் தாங்குதடா
ஏழைகள் படுந்துயர் நீங்குதடா

செல்வத் தமிழர் திருவோங்கச்
சீராய் வருந்தைத் திருநாளே
தொல்புவி யெங்குஞ் சுகமோங்கத்
தோன்றும் நாளைத் தொழுவோமே.

நினைவுகள் மலர்ந்து வாழும்நாள்
நீதிகள் நிறைந்து நீழும்நாள்
மனைதொறும் மங்களம் ஆளும்நாள்
வாழ்வினில் நன்மைகள் சூழும்நாள்

வெய்யோன் உத்தரஞ் செல்லும்நாள்
விளைவு திருந்தும் தைத்திருநாள்
எய்தும் மகரம் வெய்யோன்போய்
இருந்து செல்லுந் திருநாளே.

மேழியின் பயனைக் காணும் நாள்
விளைகதிர் இல்லஞ் சேரும்நாள்
சூழும் வறுமை அகலும்நாள்
சுற்றம் பேணி மகிழும்நாள்

வண்ணத் தரையை மெழுகிடுவோம்
மாவின் கோலம் எழுதிடுவோம்
விண்ணைப் போலெழில் அங்கிடுவோம்
வெய்யவன் பொங்கல் பொங்கிடுவோம்.

சங்கரன் திருவருள் எண்ணிடுவோம்
சந்தத மூந்துதி பண்ணிடுவோம்
பொங்கற் றிருநாள் போற்றிடுவோம்
புதுமை பொங்க வீற்றிடுவோம்.

★

அரசியல் அலை

## பிரவாகத்தாற்பிரதமர்பெற்றபயன்

---o---

### தேசிய மயமாக்குதல் பற்றிச் சித்தத் தெளிவு

### ஆனல், இன்னும் பேச்சு அலங்கார அளவுதான்

ஈழநாட்டை மாவெள்ளம் பாழாக்கிவிட்டது என்ற துக்கச் செய்தியைக் கேட்ட புறநாடுகள் எல்லாம் ஓடோடியும் உதவியளித்தன, அளித்து வருகின்றன பாரததேசம் அயல்நாடு மட்டுமன்று, தாய் நாடுமாகும். அவ்வகையிலே உடனடியாக உதவி செய்தது. உதவியும் பேருதவியாகும்.

மற்றும் இங்கிலாந்து அமெரிக்கா உருசியா சீனம் முதலிய நாடுகள் ஆன உதவிகள் செய்து வருகின்றன. இவற்றையெல்லாம் பிரதமர் பண் [illegible] ஏற்றுக்கொண்டு மனமார்ந்த நன்றி அறிக்கை விடுத்தார். அவ்வளவில் அவர் மனம் ஆறுதல் அடையவில்லை. நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லையென்பது போல ம. ஐ. முன்னணித் தேசிய மயத் திட்ட எண்ணம் பிரதமரின் அகத்தை வருத்தியபடியிருந்தது; வாய்விட்டரற்றும்படி செய்தது. உண்மையை உள்ளபடி உரைத்துவிட்டார்.

தோட்டங்களைத் தேசிய மயமாக்கும் ஆளுங் கட்சித் திட்டத்தை நினைக்க மாட்டேன் என்னும் பொருள் பட அக்கட்சிக் கூட்டதில் அறிவித்திருக்கின்றார் திரு. பண்டாரநாயக வெளிநாட்டிலிருந்து விதம் விதமான உதவி பலவேறு கொள்கையினர் உதவப் பெற்றுக்கொண்ட பிரதமர் 'நக்கீரர்' நாவிழந்தார் என்ற பொதுமொழிப்படி புறநாடுகளின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் தேசியமயத் திட்டத்தைப் பற்றிப் பேசமட்டுமன்று எண்ணவும் இடமில்லாது கர்வ பங்கஞ் செய்யப்பட்டார் —

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

செவ்வாய்க்கிழமை 14-1-58 சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்து சாதனக் காரியாலயமும் தைப்பொங்கலின்பொருட்டு மூடப்பட்டிருக்கும் என்று அன்பர்களுக்கு அறியத்தருகின்ருேம்.

அதிபர்

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹூ மார்கழி மீ உசூ வ வெள்ளிக்கிழமை


## பழி பாதகத்துக்கும் பயமில்லையா?

உணவின்றி உடையின்றி உள்ளம் வாடுகின்ருர்கள் பல்லாயிரக் கணக்கான மக்கள். பொருளிழந்து பொன்னிழந்து கதியற்றவர்களாய்க் கலங்குகின்றவர்கள் உயிரையுமிழக்கக்கூடிய வகையில் உள்ள உணவையும் உதவாதுதடுத்து வைக்கின்ருர்கள் தறுகணாளர்கள். என்னே! மனித குலத்தின் நிலைமை இன்று!

பசியாற் பட்டினியால் ஊரவர்களை உயிர் நீக்கச் செய்யும் பாதகர்கள்தேசத்துரோகிகளல்லவா? இவர்களை எதற்காக முதல் அமைச்சர் தண்டிக்காமல் விட்டிருக்கின்ருர்? உணவுப் பொருட்களைக்கொணர்ந்த கப்பல்களிலே இறக்குமதி வேலை செய்யுந் தொழிலாளர்களைக் குண்டெறிந்து கலகஞ் செய்து பயமுறுத்தி அகற்றிவிடும் தொழிற்சங்கத்தார் முதல் அமைச்சருடன் கலந்துரையாடுவதை நோக்குமிடத்து மக்கள் ஆட்சியில் எந்த விதமாகவும் நடந்துகொள்வதற்கு இடமுண்டென்பது போலத் தோற்றுகின்றது. அயல்நாட்டாரும் புறநாட்டாரும், அம்ம! என்ன பரிதாபம் என்று, உணவும் உடையும், பொன்னும் மருந்தும் இன்னும் எத்தனையோ பொருட்களும் உதவி நிற்கும் இந்த ஆபத்தான வேளையிலே கட்சிக்குப் பலந் தேடுவதற்கும் தலைமைப் பதவிக்கு வழி காண்பதற்கும் அரசியல் வாதிகள் புறப்பட்டு நிற்பது மானமற்ற ஈனமான செய்கையாகும். அல்லற்படும் நேரத்தில் அரசியற் கட்சிகளின் ஆக்க வேலையைச் செய்யும் தலைவர்களின் நயவஞ்சகத்தைக் கண்டு பொருதுபொங்கியெழுந்த இயற்கையின் சீற்றக் கண்ணீரே பிரவாகமாகப் பெருக்கெடுத்ததென்ருற் பிழையாகாது.

அது ஒருபுறமிருக்க முதல் அமைச்சர் எதிர்க் கட்சிகளின் அநுதாபத்தையும் பெற்றுவிட்டால் அரசு நடத்துவது சுலபமாய்விடும் என்று இந்த நெருக்கடியைப் பயன்படுத்த எண்ணிவிட்டார் போலும்! தமிழ் எழுத்துப் பொறித்த விசை வண்டியிற்பயணஞ் செய்தார் திரு. பண்டாரநாயக என்று சிலர் பெருமை கொள்கின்ருர்கள். அவ்வளவோடமையாது தமிழ் மொழியிலும் சொற்பெருக்காற்றக் கூட முதல் அமைச்சர் முயன்றுவிடுவார். ஆனல் அரசியற்கொள்கை அணுவளவும் அசையவில்லை என்பது வெளிப்படை. என்னை! உணவுக் கப்பல்கள் பல கொழும்புத்துறைமுகத்தில் தேடுவாரற்று நங்கூரமிட்டிருக்கின்றனவே. இவற்றைக் காங்கேயன்றுறை ஊர்காவற்றுறை திருக்கோணமலை முதலிய தமிழகத் துறைமுகங்களுக்கு அனுப்பி உணவுப் பொருட்களை அப்பகுதியிலுள்ளவர்களுக்கு வழங்குவதற்கு திரு. பண்டாரநாயகவுக்குச் சித்தம் தெளியவில்லையே. தமிழகத் துறைமுகங்கள் பழையபடி பயன்படுத்தப்படுவது அரசியற் கொள்கைக்கு மாருனதன்ருே? இவ்வளவு தான் வெள்ளப்பெருக்கால உண்டான சுடலை ஞானம்.

எவ்வாருயினும் கொழும்புத் துறைமுகத்தில் எழுந்திருக்கும் தொழிற் கட்சிக் கலகத்தைத் தடுத்து வைப்பதற்கு முதல் அமைச்சர் முதலாவதாக முயலுதல் வேண்டும். வேலி பயிரை அழித்தாற் போன்று அமைச்சர்களே கட்சித் தலைவர்களுமாயிருந்து தங்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவு தேடுவது சனநாயகமாகாது — மக்கள் ஆட்சியாகாது; [illegible] மரபாகாது; மான[illegible]!

—0—

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### நெய்க்குடம் உடைந்தது……

பெருவெள்ளப் பெருக்காற் பெருமிதங் கொண்டவர்களைப்பற்றி எண்ணுமல் எழுதாமல் விட முடியாது, மண்ணெய்க் கட்டுப்பாடு வந்ததும் கண்ணுங் கருத்துமாயிருந்த சடைக்காரரின் பேரானந்தம் சொல்ல முடியாது. 'மோட்டார்' வண்டிகளை வாடகைக்குச் செலுத்துபவர்களும் அதற்கு 'பெற்ருேல்' வழங்குபவர்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கருணையுடன் கையாண்டனர், இவ்வாறு பிரளயம் ஏற்பட்டாலும் 'தான்மட்டுங் வாழும்'மனப்பான்மையை மரபாகக் கொண்டிருக்கின்றவர்கள் இருக்கும் வரை என்ன குறை!

### கல்லூரிக் கல்வி

மார்கழி விடுமுறையின் பொழுது சிரேட்ட தராதர வகுப்புப் பயின்று அடுத்தாற்போல என்ன செய்வதென்று மாணுக்கர்களும் அறியாது தடுமாறி நிற்கின்றனர். ஆசிரியர்களும் அதைப்பற்றி விளக்கங் கூருதுவிட்டனர். தை ஆகிவிட்டது. கல்லூரிகள் ஆரம்பித்துவிட்டன. ஆங்கிலத்திற் பயிற்சி பெறப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு வசதிகள் பலகல்லூரிகளிலில்லையாம். அந்த ஒழுங்கை நம்பியிருந்த மாணுக்கர்கள் நடுத்தெருவில் விடப்பெற்றிருக்கின்ருர்களாம். இது விபரீதமாயிருக்கின்றது. தமிழகத்து மாணுக்கர்களுக்கு ஆங்கிலமும் கல்விப் பயிற்சி எத்துணைப் பயனுடையது என்பதை ஆசிரியர்களும் முகாமைக்காரரும் அரசியல் வாதிகளும் அறியாதிருப்பது நூதனமே.

## யாழ் மாநகரசபைத் தலைவர்

—:0:—

## வழக்கறிஞர் திரு. பொ. காசிப்பிள்ளை மறுப்பின்றித் தெரிவுசெய்யப்பட்டார்

பதினைந்து அங்கத்தவர்களும் தலைவர் பதவியை நோக்கிப் பகற் கனவு கண்டு வந்தார்கள் என்று பலர் சொன்னுர்கள். ஈற்றில் ஐவர் அந்த எண்ணம் உள்ளவர்களாய்க் காணப்பட்டனர். ஆனல் திங்கட்கிழமை தெரிவு நடக்கும்பொழுது ஒருமனப்பட்டார்கள் எல்லா அங்கத்தவர்களும். ஏகமனதாகத் திரு. பொ. காசிப்பிள்ளை வழக்கறிர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இந்தப் போட்டியில்லா ஒழுங்கு போற்றப் படத் தக்கது.

திரு. காசிப்பிள்ளை நெடுங்காலமாக உள்ளூர் ஆட்சியில் நகரசபை அங்கத்தவராகக் கடமையாற்றி வந்திருக்கின்ருர். வட்டாரத் தெரிவிலும் எதிர்ப்பின்றித் தெரிவு செய்யப்பட்டவர்.

உப தலைவராகத் திரு. சோ. இராசரத்தினம் தெரிவு செய்யப்பட்டார். இந்தப் போட்டியில் திரு. ஆ. துரைராசசிங்கமும் காஜியார் அபுசாலியும் கலந்து கொண்டனர். ஆனல் திரு. இராசரத்தினம் ஒரு அதிகப்படியான வாக்கினல்வெற்றிபெற்ருர்.

புதுத்தலைவர் தான் கட்சிப் பற்றற்ற விதமாக நகரத்தின் நன்மைக்குஉழைப்பதாக நிர்ணயம் பூண்டு விட்டதாகத் தெரிவித்தார். பின்னர் தலைவரும் உப தலைவரும் நகர வீதிகள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

—

## உண்மையானது பற்றிய உள்ளுணர்வு

### பூர்வ புண்ணியப் பலனுய் இப்பிறவியில் வருகின்றது

ஆன்மார்த்தப் பொருள்களில் வேட்கை, சமயக் கருமங்களில் விருப்பு, தூயோர் சகவாசத்திலும் தூய நூல்களைக் கற்பதிலும் பேரவா என்பவற்றுக்கு, எங்கள் எண்ணங்களை மேலான வாழ்க்கைக்குத் தகுதியாக அமைத்தலும் எங்கள் நோக்கங்களை உயர்ந்த நோக்கங்களோடு இணைத்தலும் காரணங்களாயுள்ளன. சாதாரண இலௌகிக வாழ்க்கையில் வரும் அனுபவத்துக்கு மேலான வாழ்க்கை அனுபவம் ஒன்றை விழைந்து செயலாற்றுதலே மேலே குறிப்பிட்ட உயர்ந்த நோக்கமாயமைகின்றது.

உயர்ச்சியிலும் வளர்ச்சியிலும் மேலான குறிக்கோளை அடைதலிலும் உண்டாகும் விருப்பானது அது உண்டாகும் தருணத்தில் உண்மையானதாயிருக்கின்றது. எங்கள் எண்ணங்களுக்கு அடிப்படையானது ஒன்று இருக்கின்றதென்பது சொல்லாமலே யமைகின்றது. அவ்வாறு அடிப்படையாயுள்ள அதுவே எங்கள் விருப்புக்களை உண்டாக்கித் திடப்படுத்துவதாயிருக்கின்றது. எந்த இலக்கை அடைதற்கு எங்கள் விருப்பு எம்மை வழிப்படுத்து[illegible] அந்த [illegible] நிர்மானிக்கின்றது. சுருக்கமாகச் சொல்வதானல் இப்பொழுதுள்ள எங்கள் வாழ்க்கை நிலைமைக்கும் எங்கள் இலக்காயுள்ள ஓர் நிலைமைக்குமிடையிலுள்ள வேறுபாடுபற்றிய உள்ளுணர்வொன்று எங்களுக்கிருக்கின்றது இவ்விருவகை வாழ்க்கை முறைகளுக்குமிடையிலுள்ள வேறுபாடு பற்றிய உள்ளுணர்வு பல ஏதுக்களாலுண்டாயிருக்கின்றது. இப்பொழுதுள்ள வாழ்க்கையின் சிறுமையையும் எமக்கு இலக்காயுள்ள வாழ்க்கையின் பெருமையையும் உணரும் உள்ளுணர்வுக்கு ஏதுக்களாயுள்ளவற்றுள் எங்கள் பூர்வ புண்ணியப் பலன் ஒன்ருயிருக்கின்றது.

இதை 'விவேகம்' என்னும் சொல்லாற் குறிப்பிடுகின்ருேம். உண்மைப் பொருளைப் பெறும் பெரும் வேட்கை, — எங்கள் இலக்காயுள்ள இறைவனையடைதற்குள்ள வேணவா – ஆனது புலன்களாலறியும் பொருள்கள் பற்றிய உணர்விலிருந்து நீங்கு தலையுமுடையதாயிருக்கின்றது. விவேகமும் வைராக்கியமும் இணைந்து செல்கின்றன. நாங்கள் ஆராய்கிருேம் என்று அறியாமலே மனத்தில் நாம் செய்த ஓர் ஆராய்ச்சி இந்த 'விவேக'த்துக்குக் காரணமாயிருக்கின்றது. இந்த ஆராய்ச்சி வெளிப்படையாய் நிகழும் பொழுது சாதனையின் நேரான பாதையிலுள்ளபடியாய் அமைகின்றது.

முற்பிறவிகளில் நாம் விரும்பிச்செய்த நல்வினைப் பயனுய் இப்பிறவியில் நாம் அறியாமல் இயல்பாகவே ஓர் மெய்ஞ்ஞான வேட்கை உண்டாகின்றது. எங்கள் முற்பிறவிகளில் நாங்கள் சிறிது உண்மைக் காட்சி உடையராயிருந்து வாழ்க்கையின் சிக்கல்கள்பற்றிச் சிந்தித்து அவற்றை நீக்கும் வழிவகைபற்றி ஆராய்ந்திருக்கலாம். இப்பிறவி சென்றபிறவியின் தொடர்ச்சியேயாகும்.

ஆகையினலே மெஞ்ஞான வேட்கையுடைய ஒருவர் செய்ய வேண்டியது, உள்ளுணர்வில் தோன்றுவதை வெளிப்படையாக ஆராய வேண்டியதாகும். எமக்கு முன்பு நாம் கண்டு அனுபவிக்க வருவதிலிருந்து எங்கள் வெளிப்படையான ஆராய்ச்சி ஆரம்பமாகின்றது. எங்கள் புலன்களால் அறியும் அறிவை உண்மையானதாக நாம் ஒப்புக்கொள்ளுகிருேம். இச்சட உலகைக்காண்கின்ருேம். இச்சட உலகிலுள்ளவர்களாக எம்மை நாம் காண்கின்ருேம் அகில உலகத் தொகுதியின் ஒரு பகுதியாக இந்த உலகில் நாங்களிருக்கின்ருேம். மற்றவர்கள் மத்தியில் நீங்கள் இருக்கின்றீர்களென்பதை விளக்குதற்கு அதிக நேரம் தேவைப்பட மாட்டாது. இந்த அறிவு உண்மையானது என்பதற்கு வேறு உதாரணம் தேவையில்லை. ஓர் பொருள் இருக்கின்ற

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திசாதன முறை
இது
கர்மயோகம், பக்தியோகம்,
இராஜயோகம், ஞானயோகம்
என்பனவற்றைத்
தெளிவாக விளக்குவது
20 அத்தியாயம்,
264 பக்கம்.
விலை ரூபா 1/=
அதிபர்:
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

இந்துசாதனக் கல்விக் கதிர்
இல. 8
சைவசமயம், கல்வி
இலக்கியம், கணித விஞ்ஞானம்
இந்துசாதன இளைஞர் பகுதியாகப்
பட்சந்தோறும் வெளிவருவது

ஆசிரியர்க்கும்
ஆசிரிய மாணவர்க்கும் உரிய
அரிய நூல்!
படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்
சைவத் திருவாளர்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
B. A. அவர்கள் இயற்றியது
புதுக்கிய இரண்டாம்பதிப்பு.
விலை: ரூபா 3-00
அதிபர்
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

# சுந்தரமூர்த்தி நாயனார்

(முற்றொடர்)

அவ்வூரிலிருந்துகொண்டு புற்றிடங் கொண்டார் பொன்னடிக் கமலங்களைப் பணிந்திருந்த நம்பியாரூரர் பல பல சிவ தலங்களை வணங்கிக் கொண்டு திருக் குருகாவூரை நோக்கி நடந்தார், அப்பொழுது சுந்தரர்க்கு நீர் வேட்கை மிகு பசியுடன் தோன்றி வருத்திற்று அதனுல் அவர் வாட்டம் அடைந்தார் சிவனடியார் வருந்துவதைச் சிவபெருமான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். ஆதலால் சிவபிரானுர் அவருடைய தாகத்தையும் பசியையும் தீர்க்க நினைத்தார். சிவபெருமான் சுந்தரர் வரும் வழியில் குளிர்ச்சி பொருந்திய ஒருதண்ணீர்ப் பந்தலை அமைத்து, அந்தணர் வடிவங் கொண்டு அதன்கீழ் இருந்தார். சுந்தரர் தொண்டருடன் வந்து அப் பந்தலுட் புகுந்து "சிவாயநம" என்று சொல்லிக்கொண்டு பெருமான் முன் சென்றுர். அப்பொழுது குருகாவூர்க் குழகர் அவரை விளித்து, 'நீர் மிகவும்பசித்திருக்கின்றீர்; ஆதலின் இப்பொதி சோற்றை உமக்குத் தருகின்றேன். இதனைஉண்டு இக்குளிர்ந்த நீரைக் குடியும் என்றுர். அதனை மறுத்தலாகாது என இசைந்தருளினர் நம்பியாரூரர்.

அவ்வந்தணர் அளித்த பொதி சோற்றை வாங்கிச் சென்று தொண்டருடன் திருவமுது செய்தார். வந்த தொண்டர் யாவரும் உண்டு பசியாறினர்; அவ் வழியே வந்த வழிப் போக்கரும் உண்டு பசிஆறினர். பின்னும் அப் பொதி சோறு குறையாது விளங்கியது. எல்லோரும் இனிய தண்ணீர் பருகி இறைவனைப் போற்றி அப் பந்தரிலே துயில் கொள்வாராயினர். துயின்றோர் விழித்துப் பார்த்தபொழுது வெறு வெளியைக் கண்டனர்; பந்தரும் இல்லை; அந்தணரும் இல்லை.

சிவனருளின் திறத்தைக் கண்ட சுந்தரனுர்,

'பாடுவார் பசிதீர்ப்பாய்!
பரவுவார் பிணிகளைவாய்!
ஓடுகள் கலனுக
உண்பலிக் குழல்வானே!
காடுநல் லிடமாகக்
கடுவிருள் நடமாடும்
வேடனே! குருகாவூர்
வெள்ளடை நீயன்றே"

என்று பாடினுர்.

## இரந்து சோறு அளிக்கப்பெறுதல்

பல தலங்களையும் தரிசித்தபின் திருக்கழுக்குன்றத்திலிருந்து திருக்கச்சூர் அடைந்து ஆலக் கோயில் அண்ணலைப் பணிந்தர். ஆரூரர் பசியுடன் சோர்ந்திருந்தது கண்ட சிவபெருமான் ஓர் அந்தணராய் வந்து வீடுதோறும் சோறு இரந்து வந்து அடியவர்க்கும் சுந்தரர்க்கும் அளித்தார். அதை உண்பதற்குள் அந்தணர் மறைந்து போனுர். தமக்காகச்சிவந்த பாதங்கள் நோவக் கடு வெயிலில் நடந்து சோறிரந்தமைக்கு வருந்தினுர் பின் காஞ்சி அடைந்து பல பதிகளையும் வணங்கித் திருவோண காந்தன் தளியில் பதிகம் பாடிப் பொன் பெற்றுர். பின் திருக்காளத்தி அடைந்து கண்ணப்பரையும் காளத்தியப்பரையும் வணங்கித் திருவொற்றியூர் அடைந்தார், அவ்வூரிற் பதிகம் பாடித் தங்கியிருந்தார்.

## சங்கிலியாரை மணத்தல்

திருக்கயிலையில் இருந்த உமையம்மையின் சேடியருள் அநிந்திதை என்பவர் ஞாயிறு என்னும் ஊரில் பிறந்து சங்கிலியார் என்னும் பெயருடன் வளர்ந்து மணப்பருவம் எய்தித் திருவொற்றியூர்த் திருக்கோயிலில் மலர்மாலை கட்டும்பணி செய்துகொண்டு கன்னிமாடத்தில்இருந்தார். அங்கு வந்த சுந்தரர் சங்கிலியாரைக் கண்டு காதல்கொண்டார். இறைவரிடம் தம் கருத்தை விண்ணப்பித்தார் அன்றிரவு அவர் கனவிலே தோன்றி சங்கிலியை மணஞ்செய்து வைப்போம் என்று அருளினுர். சங்கிலியார் கனவில் "எம்மால், தடுத்தாட் கொள்ளப்பெற்றசுந்தரனை நீ மணந்து கொள்க" என்றருளினுர். சங்கிலியார் அவர் திருவாரூரில் ஒரு மணம் செய்துகொண்டிருப்பர் என்பதை அறிந்திருந்தும் இப்படி அருளிச் செய்தீர்கள் என்றுர். "உன்னைப் பிரியாதிருப்பதாக உறுதிமொழி கூறினுல் நீ மணந்து கொள்ளலாம் என்று கூறிய இறைவர் சுந்தரர்கனவிலே தோன்றி "நீ அவளை விட்டுப் பிரியாதிருப்பதாகச் சூளுறவு செய்தல் வேண்டும்" என்றருளினுர். சுந்தரர் 'நான் சூளுறவு செய்யத் திருமுன் வரும்போது தாங்கள்திருக் கோயிலைவிட்டு மகிழ மரத்தின் கீழ் வந்திருத்தல் வேண்டும்" என வேண்டினுர். இறைவர் சங்கிலியார் கனவில் மீண்டும் தோன்றிச் "சூளுறவு செய்யச் சுந்தரன் வருவான். மகிழ மரத்தின் கீழ்ச் சூளுறவு செய்யச் சொல்" என்று கூறி மறைந்தார்.

காலையில் சங்கிலியார் திருக்கோயிலுக்கு வந்த போது ஆரூரர் இறைவன் திருமுன் சூளுறவு செய்து தருவதாகக் கூறினுர். சேடியர் "மகிழின்கீழ் செய்தாற் போதும்" என்றனர். துணுக்குற்ற சுந்தரர், இறைவன் திருவிளையாட்டை எண்ணி மகிழின் கீழ் உறுதியுரை கூறினுர். இறைவர்ஆணைப் படி அடியார்கள்கூடிச் சங்கிலியார்க்கும் சுந்தரர்க்கும் திருமணம் செய்வித்தனர். நீண்ட நாட்கள் ஒற்றியூரில் ஆரூரர் சங்கிலியாருடன் தங்கிப் பெருமானைப் போற்றி வந்தனர்.

(வரும்)

# இளைஞர் கழக உறுப்பினர் பகுதி

(சிறு கதை)

## பக்திப் படமும் பார்த்த பயனும்

செல்வி ச. அமிர்தயோகம்
தெஹிவலை

ஓர் ஊரில் பரமசிவம் என்ற பெயரையுடைய ஓர் சிவபக்தர் இருந்தார். அவருக்கு, சம்பந்தன் என்ற ஒரு மகனும் இருந்தான். அவன் ஒருதுஷ்டன். பரமசிவம் சம்பந்தனைக் கோவிலுக்கு அழைத்துச் செல்வதற்கு பல முயற்சிகள் செய்தும் பயனற்றுப் போய்விட்டன.

அவ்வூர்ப்படமாளிகையில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் புராணப் படம் காண்பிக்கப்படுமென்று சுவரொட்டிகள் அவருக்கு அறிவித்தன. இதைக் கண்ட சிவபக்தருக்கு ஓர் யுக்தி தோன்றிற்று. உடனே அவர் விரைந்து வீடு சென்று மகன் சம்பந்தனை அழைத்து "உனக்குப் படம் பார்க்க விருப்பமாயின் இப்பொழுது என்னுடன் வா" என்று கூறினுர். இவ்வரிய சந்தர்ப்பத்தைப் படப்பிரியன் சம்பந்தன் நழுவவிடுவானு? என்ன! உடனே தயார் பண்ணிக் கொண்டு "அப்பா, நான் ஆயத்தம், வருகிறேன்" என்முன்.

சிறிதுநேரத்தில் இருவருமாகப் படமாளிகைக்குச் சென்றனர். அப்படத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர், தகப்பனுராகிய சிவபாதவிருதையருடன் கோவிலுக்குச் சென்று தேவாரம் பாடியதுமுதல் சிவ சோதியினுள்ளே புகுந்து சிவசாயுக்கியம் அடைந்தவரை காண்பிக்கப்பட்டது.

படம் முடிந்து வீடு திரும்பும் பொழுது தகப்பனுர் மகனைப் பார்த்து "சம்பந்தா! படம் எப்படி?" என்று வினவினுர். இதற்குச் சம்பந்தன் "அப்பா! திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் என்று ஒருவர் இருந்தார் என்பது இப்பொழுதுதான் தெரியும் என்முன். அதற்குத் தகப்பனுர் "சம்பந்தா! நான் உன்னைக் கோவிலுக்கு அழைப்பது இவர்களைப் பற்றியெல்லாம் அறிந்து அவர்களைப்போல் நடக்க வேண்டுமென்பதற்காகத்தான். ஆனுல் நீ வருவதில்லையே!" என்று கூறினுர். அதற்கு சம்பந்தன், இன்று தொடக்கம் நான் தங்களுடன் கோவிலுக்கு வருகிறேன் என்று பகர்ந்து தினமும் கோவிலுக்குச் சென்று கடவுளைத் தரிசித்துக் கதாப்பிரசங்கங்களையும்கேட்டுச் சைவசமய அறிவினைப் பெற்றதோடு புனிதமான ஒழுக்கமுள்ளவனுனுன். தேவார திருவாசகங்களை எப்பொழுதும் இசையுடன் பாடித் தோத்திரம் செய்து வந்தான்.

# இந்துசாதன இளைஞர் கழகம்

இளைஞர்களே,

தமிழ்மக்களின் ஆண்டுப்பிறப்பு எனத்தகும் தைப் பொங்கல் ஆகிய திருநாளைக்கொண்டாடுவதற்கு யாவரும் ஆவலாயிருப்பீர்கள். "ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்" என்று சிவபெருமானின் அஷ்ட மூர்த்தங்களுள் ஒன்றுகிய சூரியனை—சிவசூரியனைப் - போற்றும் திருநாள் யாவராலும் போற்றப் படவேண்டியதே.

இவ்வாண்டுபெய்த பெருமழையினுல், எங்கள் இலங்கையின் பெரும்பாகம் வெள்ளக் காடாக விளங்குகின்றது. ஆண்களும் பெண்களும், பிள்ளைகளும், பல்லாயிரக் கணக்கானோர் ஊண், உடை, உறையுள் (வீடு) இன்றித் தவிக்கின்றனர். நம் தாய்நாடாகிய இந்தியாவும் மற்றும் நாடுகளும் ஆகாய விமானங்களின் மூலம் உணவு, உடை, மருந்துவகை என்பனவற்றை அன்புடன் அனுப்புகின்றன. கிழக்கு மாகாணத்தில் வெள்ளச் சேதம் மிகவும் அதிகம். இருக்க இல்லிடம் இன்றி இடருறும் மக்கள் பலர்.

இந்த நிலைமையில், இளைஞர்களாகிய நீங்கள் செய்யக்கூடிய சிறந்த தொண்டு ஒன்று உண்டு.

பொங்கல் நாளிலே சுடப்படும் சீனவெடிக்குப் பணம் செலவு செய்து வந்தீர்கள். சீனவெடிகளைச் சுடாது விடுங்கள்; அப்பணத்தைக் கிழக்கு மாகாணத்து இளைஞர்கட்குச் சேரக்கூடியதாகச் செய்யுங்கள். பொங்கல்நாளிலே விலை உயர்ந்த பொங்கல் இதழ்களை அனுப்பி வந்தீர்கள். இவ்வாண்டு 3 சதம் பெறுமதியான தபால் அட்டை (போஸ்றகார்ட்)யில் வாழ்த்தினை அனுப்புங்கள். இதனுல் எஞ்சும் பணத்தையும் ஊண், உடை, உறையுள் இன்றிக் கஷ்டப்படும் (உங்கள் அயலிலுள்ள) இளைஞர்களுக்கும் பிறர்க்கும் கொடுத்து உதவி புரியுங்கள்.

இ. இ. க.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ. ஸீ. ஈ. இலக்கியம்

திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்

அரும்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.

விலை சதம்: 50.

மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.

# கல்வி விளக்கம்

"என்கடன் பணி செய்துகிடப்பதே" —அப்பர்

## சங்கம்

சங்கம் என்றால் என்ன? தனித்தொருவர் செய்யும் முயற்சிக்கும் பலர் ஒருங்கு சேர்ந்து செய்யும் முயற்சிக்கும் தாரதம்மியம் என்ன? சங்கம் என்னும் மொழி வடமொழி. ஆயினும், தமிழிலே பண்டு தொட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது. "சங்கத் தமிழ் மூன்றுந்தா" என்றருளினர் ஔவையார். "சங்கக் கடைகள்" வந்தபின் எல்லார்வாயிலும் 'சங்கம்' என்னும் சொல் பெருவழக்கே. சங்கம் என்பது முன்னை நாளில் 'கூடல்' என்று சொல்லப்பட்டது என்பர் பெரியோர். கழகம், மன்றம், சபை என்னும் சொற்களும் ஆட்சியில் வந்துள்ளன.

'தமிழ் வளர்க்கும் சங்கம்' 'தமிழ்ச்சங்கம்'; வரியிறுப்போர் நகர் நன்மையைக் கருதி ஏற்படுத்திய சங்கம் 'நகரசங்கம்'. சைவ சமயத்தை வளர்க்குஞ் சங்கம் 'சைவசமய வளர்ச்சிச் சங்கம்' இளைஞர் தமது தேர்ச்சிப்பொருட்டாக ஏற்படுத்திக்கொண்ட சங்கம் "இளைஞர் தேர்ச்சிச் சங்கம்".

இங்ஙனம் நோக்குமிடத்து 'சங்கம்' என்பது தனக்கென ஒருகொள்கையுடையதாயிருத்தல் வேண்டும் என்பதும்; அக்கொள்கையைப் பெருக்கிக் கொள்ளும் விருப்புடையவரை உறுப்பினராகக் கொண்டு பெருக்குதற்கேற்ற வழிவகைகளை நாடி அவற்றின் வழிநிற்பது என்பதும் நன்கு புலப்படுகின்றன.

சங்கத்தின் நோக்கம் பலதிறப்பட்டதாக இருப்பின் வலிமை கூறுபட்டுச் சிதறுண்டு போகலாம். அதுவும் சிறப்பாக இருத்தல் நன்று சிறப்பு என்றால் தனக்கென்று ஒரு தன்மையை உடையதாயிருப்பது பொதுநீங்கிய தன்மையே சிறப்பெனப்படுவது. ஒரே கருத்துடையார் பலர் ஒன்றுகூடுவதனால், சங்கத்துக்கு ஆற்றல் உண்டாகின்றது. உறுப்பினர் கருத்து வேறுபடுமேற் சங்கம் நிலைகுலையும்; கருத்து வேறுபட்டோர் சங்கத்துக்கு மாறுபுரிவாராயின் அத்தகைய சங்கம் அழிந்துபடும்.

உடலின்கண் உள்ள தலை, கை, கால், வயிறு முதலிய உறுப்புக்கள் ஒன்றுபட்டுத் தொழில் புரிவதுபோலச் சங்கத்தின் உறுப்பினர் ஒன்றுபட்டு தொழில் புரியவேண்டியவர் ஆவர்.

சங்கக்கள் கொள்கை வேறுபாட்டாற் பலதிறப்படுவன. மக்களால் அடைதற்குரிய புருடார்த்தங்கள், நான்கனுள் அடங்குமாதலின் அவற்றிற்கியையச் சங்கங்களும் அறநெறிச் சங்கம், பொருள் நெறிச் சங்கம், இன்பநெறிச் சங்கம், வீட்டுநெறிச் சங்கம் என நால்வகைப்படும்.

ஒருவன் வேறுபட்ட கொள்கைகளையுடைய பல சங்கங்களில் அங்கத்தவனாகவிருக்கலாம். எனினும் மாறுபட்ட கொள்கைகளையுடைய சங்கங்களில் அங்கத்தவனாயிருத்தல் பொருத்தம் அன்று. ஒருவன் கருத்தொவ்வாவிடத்தை ஒழித்துக் கருத்து ஒத்த விடத்தைச் சார்ந்து நிற்றலே முறையாகும்.

ஒருமனப்பட்ட தகவுடையவரை அங்கத்தினராகக் கொண்ட சங்கமானது நிலைபெற்று நின்று நன்மை பயக்கும்.

சங்கத்தின் விதிகளுக்கு இயைய நியமிக்கப்பட்ட தலைவன் ஒருவழிச் செல்வானாயின் அவனுக்குமாறுபட்டு நில்லாது ஒற்றுமைவழி நின்று கருமம் முடிப்பதுவே முறை. தலைவனுக்கு அமைவது என்பது சங்கத்துக்கு — சங்க விதிக்கு — அமைவதென்பதே.


தலைவனைத் தெரிந்தெடுத்துக்கொண்டபின் அவன் வழி நிற்றலே மரபு. அவன் தகுதிவாய்ந்தவன் அல்லன் எனப் பெரும்பாலோர் கருதுவாராயின் தகுதியுள்ள ஒருவனைத் தெரிவுசெய்து அவன்வழி நிற்பதே மரபு. அஃதன்றித் தலைவன் வாக்குக்கு எதிர்வாக்குக்கூறி முரணி நிற்பது சங்க மரபன்று. அமைந்தொழுகும் பெருங்குணத்தை ஆங்கிலத்தில் அமைவுடைமை (Loyalty) என்பர். இஃதில்லாதவழி சங்கங்கள், கழகங்கள் [illegible]ருள்ளனவாகா.

கலாசாலைகளிலே பல வகையான சங்கங்கள் உண்டு. அவ்வச் சங்கங்களுக்கு ஏற்ற மரபுநெறி வழுவாது, முரண்படாது, நோக்கத்தை நிறுவேற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாகவிருந்து தலைவனுக்கு அமைந்து தத்தம் கடமைகளை ஆற்றுவதிலே சிறப்பு.

கற்பனைக் கவிதை

## விண்மீன் மகாநாடு

—மா. பீதாம்பரன்



விஞ்ஞானச் சந்திரனும் விண்ணகத்தே சென்றிடலும்
விண்மீன்கள் எல்லாம் வேகுண்டு விறுவிறுப்பாய்
"மண்மீதி லுள்ள மனிதக் குலசதோர்கள்
அஞ்ஞானத் தாலே அகந்தையால், ஆணவத்தால்,
எஞ்ஞான்றும் இன்புடனே எழிலளிக்கும் எங்களிடைச்
'செய்த' ஒருமதியைச் செலுத்திவிட்டார்" என்றிடலும்
கார்த்திகையாள் என்னும்பேர்க் கன்னி களிப்புடனே
"பாரகத்தில் உள்ளோர்கள் பரனை மதிக்கவில்லை;
மேதினியை விட்டகன்று மேலேநீ 'செல்'என்று
'பூதினி'யை விட்டார்கள் புதுமையாய்ச் சோவியத்தார்.
வானுள வந்தவளை வந்தவழி போக்குதற்கு
மாநாடு கூட்டி வழிவகுட்போம்" என்றுரைத்தாள்.
'ஓம்'என் றுரைத்தே உடுக்குலங்கள் ஒருமையாய்
நாம்இன்று மாநாட்டில் நல்லுரைகள் சொல்லவல்ல
நற்றலைவி யைத்தேர்ந்து நாடு நடத்திடுவோம்'
என்று புகன்றிடலும் இன்சொல்லாள் ஆதிரையாள்
"என்னருமைச் சோதரிகாள், என்னுரையைக் கேட்டிடுமின்,
'பூதினி'யின் மீதேறி மேதினியை விட்டகன்ற
கோதில் ஞமலிஎன்பாள் கோமாட்டி நல்லள் என்றாள்
என்றலுமே மீனினங்கள் ஏத்தி அவளுரையே
நன்று' எனநவின்று நாயார்க்குத் தூதுவிட்டார்.
நல்ல ஞமலிவந்து நடோ யகியாகிச்
"சொல்லுவன கேண்மின் சுடரளிக்கும் சோதிகளே,
வானகத்தி லேயிருந்த வன்மையுள சித்தன்யான்
மோனநெறியாலே முழுஞானம் பெற்றிருந்தேன்;
பூமியிலே சோவியத்தில் புகழுடனே போய்ப்பிறந்தேன்;
பூதினியே வாகனமாய்ப் புகுந்தேன்நும் வானகத்தில்;
மாதரீர் மண்ணுடலை நீத்துநான் மாட்சிபெற்றேன்;
இயற்கையிலே நின்றிலங்கும் இறைவன் திருவருளைச்
செயற்கைநெறி வென்றிடுதல் சேகத்தினிலே இல்லைஇல்லை.
பூதினிக்கோர் 'போடுகை"நீர் போட்டாற் புவிக்கேகும்;
பாதிமதி யாகிப் பாரினிலே வீழ்ந்திறக்கும்"
என்றுஞமலி சொல எந்திழையார் இன்புடனே
சென்றமதியைத் திருப்பிவிட்டார்; அம்மதியும்,
வந்த வழிதனிலே வாழ்ந்த முகிலினத்தின்
புந்திதனை யுடைக்கப் பொழிந்தமழை யதுதான்
"கன்னித் தமிழ் அழிப்போர் காட்டகமும் நாட்டகமும்
மின்னுமல் முழங்காமல் மேவித் துயரிழைப்பேன்
"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழைஎன்ற வாக்கியந்தான்
பொய்யாத வாறு புதுப்பொருளைக் கொண்டேயான்
பெய்திடுவேன் சோவென்னப் பெருமழையாய் இந்நாட்டில்".
என்றியம்பி ஏர்அரசி மாரி சினந்தெழுந்தாள்
குன்றுங் கிழிந்தனவே குளங்கள் உடைந்தனவே;
மன்றும் மதிலும் மரங்களுடன் மாய்ந்தனவே,
பொங்கும் புகைச்சகடப் பாதைகளும் போயினவே;
எங்கும் புலம்பல் எழுந்துமக்கள் வாடினரே.
பொன்னிலங்கைச் சீரழிவைப் பூதலத்தோர் கண்டிரங்க
வன்னி வளநாடு வாரிவன மாயதுவே.

இன்று காலை ஆசிரியருடன் உரையாடிக்கொண்டிருந்த நண்பர் ஒருவர் "இலங்கைச சரித்திரத்தில் அறியப்படாத பெருவெள்ளம்; இதனால் ஏற்பட்டுள்ள துன்பங்கள் — ஏற்படப்போகின்ற துன்பங்கள் பலப்பல" என்றார், மேலும் அவர் ஆசிரியரை நோக்கி, "சோவியத்துச் சோமனுடைய செயலே இது" எனலும், "பொதுமக்களுட் பலர் இங்ஙனங் கூறுவதும் என் செவியில் விழுந்தது" என்றார் ஆசிரியர்; அவர் உள்ளத்தெழுந்த கற்பனைக் கவிதையே இது 'பூதினி' என்னும் செயற்கைச் சந்திரன் (1) பூமியில் வீழ்ந்துவிட்டது என்று அறிகிறோம் அது வரும் வழியில் முகிலினை உடைத்துப் பெருமழையைப் பொழியச் செய்தது என்னும் கற்பனை'யைத் தழுவிய பாடல்; விஞ்ஞான உண்மையின் பாற்பட்டதென்னும் முடிபுடையதன்று.

விரைவில் வெளிவரும்

இளைஞர் சமூக வாசகம்

1 — 5

பயிற்சிகளுடன்

ஆசிரியர்:

மா. பீதாம்பரன்

### உருசியாவின் பெரிய உதவி

—0—

உருசியப்பிரதமர், இலங்கையிலுள்ள பிரதிநிதி மூலம் 2500 தொன் நிறையுள்ள அரிசியும், 200000 'இறபிள்' பெறுமதியுள்ள மருந்துவகைகளும் வழங்குகின்றார். மருந்துவகைகள் ஆகாய விமான மார்க்கமாக வந்து சேரும். அரிசிக் கப்பலில் வரும் 'இறபிள்' என்னும் உருசிய நாணயம் 1 ரூபா 23 சதத்துக்குச் சரியாகும். இங்ஙனமே உலகத்து நாடுகள் பலவும் உதவி புரிகின்றன.

### சூராவத்தை அம்மன் கோவிலில் திருவெம்பாவை

இவ்வாலயத்தில் திருவெம்பாவைக்காலம் பத்து நாட்களிலும் அதிகாலையில் திருவெம்பாவைப் பாடல்களைப் படித்து அபிஷேக பூசைகளும் நடத்தினர்கள். நாள்தோறும் திருவாதவூரடிகள் புராணம் படித்து திரு. குமாரசுவாமிப் புலவர் புத்திரன் அம்பலவாணர், பண்டிதர் திரு கா. நமசிவாயம், திரு. வை. வைத்திலிங்கம் ஆகியோர் பொருள் சொல்வதிற் பங்குபற்றினர்கள். பத்தாம்நாள் சுவாமி வீதிவலமும் நடைபெற்றது.

## பாடசாலைகளின் ஆரம்ப தினம்

### வித்தியாபகுதியாரின் அறிவித்தல்

—0—

அரசினர் ஆசிரியர் கல்லூரிகளும், வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள அரசினர் பாடசாலைகளும் ஜனுவரி மாசம் 20-ம் ஆம் திகதி ஆரம்பமாகுமென வித்தியாபகுதி அறிவித்தல்ஒன்று கூறுகின்றது.

அறிவித்தல் வருமாறு:- "வெள்ளத்தால் ஏற்பட்டிருக்கும் நிலைமை காரணமாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், மேல் மாகாணம், தென் மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் என்பதை தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள அரசினர் பாடசாலைகள் யாவும் ஜனுவரி மாசம் 20 ஆம் திகதி ஆரம்பமாகலாம். முன் அறிவித்தபடி முறையே 6 ஆம் 7 ஆம் திகதிகளல்ல.

உதவி நன்கொடை பெறும் ஆசிரியர் கல்லூரிகளின் முகாமைக்காரரும் ஆரம்பத் திகதி பற்றிய தொடர்பில் வேண்டிய மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேல் மாகாணம், தென் மாகாணம், சப்பிரகமுவா என்னும் மாகாணங்களில் உள்ள பாடசாலைகள், முன் அறிவித்தபடி அவை முறையே 6-ஆம் 7-ஆம் திகதிகளில் ஆரம்பமாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1462
நெடுந்தீவு கிழக்கு வேலுப்பிள்ளை சின்னையா
— வழக்காளி
எதிராக
நெடுந்தீவு கிழக்கு தற்போது இராமநாதபுரம் 7-ம் யூனியனின் 694-ம் வீட்டில் குடியிருக்கும்
(1) கதிரவேலு சதாசிவம்
(2) பெண் கனகம்மா
(3) இராமலிங்கம் சரவணமுத்து
(4) பெண் லீலாவதி
— எதிராளி

யாழ்ப்பாணம்டிஸ்திறிக் கோட்டில் M. B. 1462-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி. பின்னுல் விபரிக்கப்படும் நாலு துண்டுக காணி 1958 ஷூ மாசி மீ 10 உ புதன்கிழமை முற்பகள் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 687-ம் இதற்குத் தீர்வைத் 29-1-57 தொடக்கம் 31-7-57 வரைக்கும் ரூபா 500 க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத தொகையி றுக்கும்வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 176-10.

காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்தீவுப்பகுதி நெடுந்தீவு நெடுந்தீவு கிழக்கிறை குணநாயகமுதலி வளவு நிலப்பரப்பு 20 செய்பயிர் வான்பயிர் எல்லை கிழக்கு மத்தியாசு யோசெப்பு சின்னத்துரையும் பங்காளரும் வடக்கு ஒழுங்கை மேற்கு சரவணமுத்து சுப்பிரமணியமும் பங்காளரும் இளையதம்பி சோமசுந்தரமும் பங்காளரும் தெற்கு சரவணமுத்து சுப்பிரமணியமும் பங்காளரும் சிறு தென்னம்பிள்ளைகளும் ஏழு தென்னைகளும் பிறநீக்கலாக சொரியலாய் முழுவதிலும் மூன்றிலொரு பங்கு 1/3

2 ஷை இறை கட்டுப் புல்லுத்தறை நிலப்பரப்பு 16 எல்லை கிழக்கு தனுக்கோடி கந்தையாவினுதனம், வடக்கு நாகலிங்கம் கைம்பெண் சின்னுச்சியும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், மேற்கு கதிராமர் கைப்பெண் நாகமுத்து பங்காளருக்குரியவாதனம் தெற்கு ஒழுங்கை இதில் முழுவதில் சொரியலாய் எட்டிலொரு பருத 1/8.

3 ஷை இறை குழந்தையன் தொப்பு நில. பர, 12, செய்பயிர் வான்பயிர் வீடு, கிணறு, எல்லை கிழக்கு சரவணமுத்து பெண் அன்னம்மாவுக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம், வடக்கு அருள்பிரகாசம் பெண் விசிறித்தம்மாவினுதனம், மேற்கு வயிரமுத்து தனுககோடியும் பங்காளரும் மறுபேருக்குரிய வாதனம். தெற்கு நாகநாதர் பெண் பெரியபிள்ளையும் பங்காளருக்குமுரியவாதனம் வீடு. கிணறு தென்னைகள் பிறநீக்கலாக முழுவதில் சொரியலாய் ஆறிலொன்று 1/6.

4 ஷை இறைவாத்தியார் தொம்பு நில 15 செய்பயிர் வான்பயிர், வீடு, கிணறு. எல்லை கிழக்கு தனுக்கோடி சின்னத்தம்பிகளும் பங்காளருக்குமுரியவாதனம்,

## மன்னுர் நிலைமை

மன்னுரிற் சில பகுதிகளில் 21 அடி உயரத் தண்ணீர் பாய்ந்து மக்களின் உடைமையாயிருந்த எல்லாவற்றையுமே அள்ளிக் கொண்டு போய்விட்டதாம். அரிசி, சீனி, மிளகாய் முதலிய பொருள்கள் அங்கு மிக அவசியமாகத்தேவைப் படுவதாயறியவருகின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை
1 செல்லையா துரைநாயகம்
2 பெண் றெஜினு
வழக்காளிகள்
இல. M. B, 1085
எதிராக
சரவணை சண்முகம் சுந்தரம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1085-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1958 ஷூ மாசி மீ 6 உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல்வட்டி ரூபா 908-33 ம் 4-7-56 தொடக்கம் 4-12-56 வரைக்கும் ரூபா 500 (ஐநூறுக்கு) வருடம் 12 வீத வட்டியும் முழுத்தொகையுமிறுத்துத் தீர்க்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 173.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைப் பிரிவு சரவணை மானினப் புலம் தெற்கு மானினப்புலமும் மானிலககலடும் நெற்பரப்பு 45 எல்லை கிழககு தில்லைநாதர் சுவாமிநாதருக்கும் கணபதியார் விசுவலிங்கத்திற்குரியவாதனங்கள் வடக்கு இராமலிங்கம் தர்மலிங்கத்திற்குரிய வாதனம். மேற்கு செல்லப்பா பெண் தங்கத்திற்கும் பங்காளருக்குரியவாதனம், தெற்கு சுப்பர் பெண் சுன்னத்தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனம். இதில் சொரியலாய் தென்மேற்குப்புறமாக நெற்பரப்பு 12 3/4 பன்னிரண்டே முக்கால் பனைகள் வீடு கிணறும்.

ஆ. ச. இராசேந்திரம
A S. Rajendram
கொம்மிஷனர்
47. 4th Cross Street
Jaffna
M, 199 10-1-58

வடக்கு நாகலிங்கம் சுவாமிநாதரும் பங்காளருக்குமுரிய வாதனம், மேற்தும் தெற்கும் ஒழுங்கை இதில் சொரியலாய் பன்னிரண்டிலொருபங்கு ஆனல் தென்னைகள், வீடு, கிணறு பிறநீங்கலாக.

A. S. Rajendram
ஆ. ச. இராசேந்திரம்
கொம்மிசனர் & மதிப்பாளி
M 202 10-1-

## மட்டக்களப்பு நிலைமை

மட்டக்களப்பிற் சொல்லுங்கடங்காத ஆபத்து உண்டாகி இப்பொழுது நிலைமை திருந்தி வருகின்றது. உணவு போக்குவரத்து ஆதியவை சிறிது சிறிதாய்த்திருந்துகின்றது. மலமகற்றிப் புதைக்கும் வேலை இன்னமும் செய்ய முடியாததாயிருப்பதால் அவரவர் வளவுகளுக்குள்ளேயே மலம் புதைக்கப் படுகின்றதாம். இவ்வாறு அப் பட்டினத்தின் சுகாதாரநிலைமை பாதிக்கப்படுகின்றது.

## மாதாந்த விசை வண்டிச் சீட்டு

வருகிற பங்குனி (மார்ச்) மாசந் தொடக்கம் விசை வண்டிப் பிரயாணத்துக்கு மாதாந்தச் சீட்டுகள் கொடுக்கப்படுமென்று அறிய வருகின்றது. கொடுக்க வேண்டிய தொகை வழக்கமானதிலுமிருந்து குறைக்கப்படுமேயெனினும் எவ்வளவென்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

## உண்மையானதுபற்றிய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்பதற்குச் சான்று புலக்காட்சியேயாகும்.

இவ்வுலக வாழ்க்கை புலக்காட்சியிலேயேதங்கியுள்ளது புலன்களாற் காட்டப்படும் உலகிலே நாங்கள் வாழுகின்றோம். எங்கள் புலன்களாற் பெறும் அனுபவங்களின் உண்மை, உண்மையின்மை பற்றி நாங்கள் சந்தேகித்து விஞவுவதில்லை. சாதாரண மனிதன் புலன்கள் மூலம் பெறும் அனுபவத்தைச் சரியான தெனவே கொள்ளுகின்ருன்.

ஆத்மஞான வேட்கையுடைய ஒருவர்மேலான அறிவுடையவரா யிருக்கின்ருர். புலன்களால் அறிய வருவதைவிட முழுதும் உண்மையானது பிறிதொன்றுள தென்று அந்த மேலான அறிவால் அவர் அறிகின்ருர். நம் தாய்மையடைதற்கு இவ்வுண்மை அறிவே வேண்டப்படுகின்றது.

(ஸ்ரீ. சுவாமி சிவானந்த அவர்கள் எழுதிய ஓர் கட்டுரைப்பகுதியின் சாரம்.)

## திருக்கேதீச்சரம்பற்றி கோலாலம்பூர் சைவ மக்களின் சிந்தனை

கோலாலம்பூரிலுள்ள திருக்கேதீச்சரம் திருப்பணிச் சபையார், அணிமையில் உண்டான பெருவெள்ளத்தால் இலங்கை மக்களடைந்த கட்டத்திற்கும் துன்பத்திற்கும் துக்கம் தெரிவித்து, திருக்கேதீச்சரம் திருப்பணிச் சபைக் காரியதரிசி திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு எழுதும்போது திருக்கேதீச்சர நிலைமைபற்றி அறிதற்குப் பெரிதும் விரும்புவதாகத் தெரிவித்தார்களாம். திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் மறுமொழி எழுதும் போது திருக்கோயில் எவ்விதமாயும் பாதிக்கப்படாதிருந்து ஆயிரக்கணக்கான மக்களுக்குப் புகலிடமாய் விளங்கிற்று என்று குறிப்பிட்டாரென அறிய வருகின்றது.

## ஸ்ரீ. பிலிப்பு குணவர்த்தனவை நீக்குமாறு பிரேரணை

உணவு மந்திரி ஸ்ரீ. பிலிப்பு குணவர்த்தனவை மந்திரிபதவியிலிருந்துஉடனே நீக்கவேண்டுமென்று சிங்கள மகா சபையார் ஓர் பிரேரணை நிறைவேற்றியுள்ளனராம்.

# கொழும்பு—யாழ்ப்பாணப் புகையிரதம்

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் 8-1-58 புதன்கிழமை தொடக்கம் புகையிரத ஓட்டம் பின்வருமாறு செய்யப்பட்டிருக்கின்றது.

கோழும்பு – காங்கேசன்துறை

கொழும்புக் கோட்டையிலிருந்து காலை 6-45 க்குப் புறப்பட்டுக் கெக்கிருவையையடைந்து அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்குப் புறப்பட்டு விசைவண்டி பஸ்) மார்க்கமாகப் பிரயாணஞ் செய்து புளியங்குளத்தையடைந்து அங்கிருந்து மாலை 7-15 மணிக்குப்புறப்பட்டுப் புகையிரத மார்க்கமாகப் பிரயாணஞ் செய்து இரவு 11.45 க்கு காங்கேசன் துறையையடையலாம்.

காங்கேசன்தறை – கோழும்பு

காங்கேசன் துறையிலிருந்து காலை 5-30 மணிக்குப் புகையிரத மார்க்கமாய்ப் புறப்பட்டுப் புளியங்குளத்தை யடைந்து அங்கிருந்து காலை 10-30 மணிக்குப் புறப்பட்டு விசை வண்டி மார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்து கெக்கிருவையையடைந்து அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்குப் புறப்பட்டுப் புகையிரதமார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்து இரவு 10 மணிக்குக் கொழும்புக் கோட்டையையடைலாம்.

தலைமன்னுர்ப் பிரயாணம்

கொழும்புக் கோட்டையிலிருந்து காலை 6-45 க்குப் புறப்பட்டுப் புகையிரத மார்க்கமாகப் பிரயாணஞ் செய்து பிற்பகல் 1-25 க்கு கெக்கிருவவையையடைந்து அங்கிருந்து பிற்பகல் 2-15க்குப் புறப்பட்டு விசை வண்டி மார்ச்சமாய்ப் பிரயாணஞ் செய்து இரவு 8 மணிக்குத் தலைமன்னுரை யடையலாம்.

தலைமன்னுரிலிருந்து அடுத்தநாள் காலை 7 மணிக்குப் புறப்பட்டுப் புகையிரதமார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்துபிற்பகல்1-30மணிக்குக் கெக்கிருவவையையடைந்து அங்கிருந்து பிற்பகல் 3 மணிக்குப் புறப்பட்டுப்புகையிரதமார்க்கமாகப் பிரயாணஞ் செய்து இரவு 10 மணிக்குக் கொழும்புக் கோட்டையையடையலாம்.

முதலாம் வகுப்புப் பிரயாணிகள் 112 இருத்தலுக்குக்கூடாமலும் இரண்டம் வகுப்பார் 84 இருத்தலுக்குக் கூடாமலும் மூன்ரும் வகுப்பார் 70 இருத்தலுக்குக் கூடாமலும தமக்குத் தேவையான பொருள் கொண்டு போகலாம்.

தலைமன்னருக்கும் தனுஷ்கோடிக்குமிடையிலுள்ள கடற் பிரயாணமும் 9-1-58 தொடக்கம் நடைபெறுகின்றதாயறிகிரேம்.

## இலங்கை இந்திய மாணவருக்கு ஆகாயவசதி

—0—

இந்திய சர்வகலாசாலைகளிற் கற்கும் இலங்கை மாணவர் ஆகாய விமானத்தால் 9-1-58 தொடக்கம் பிரயாணஞ் செய்யவும் அவர்கள் வேண்டும் பணம் கொண்டு போதற்கு வேண்டிய அனுமதி பெறுதற்கும் வேண்டிய ஒழுங்குகள்செய்யவும் முறையே ஆகாய விமானப் பகுதியாரையும் வடமாகாண அரசாங்க அதிபரையும் வெளநிவாரண சபைத் தலைவர் ஸ்ரீசரத் விஜயசிங்ஹ கேட்டிருக்கின்றனராம்.

## ஆசிரியர் திரு. என். சங்கரப்பிள்ளை பீ. ஏ. அவர்கள் பிரிவு

ஆசிரியர் என் சங்கரப்பிள்ளை பீ. ஏ அவர்கள் தெல்லிப்பழையைச் சேர்ந்த கொல்லன்கலட்டியில் தமது இல்லத்தில் சென்ற திங்கட்கிழமை 6-1-58 இவ்வுலக வாழ்வை நீத்தார் என்று அறிந்து வருந்துகின்ரேம். திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் இப்பொழுதுள்ள வசதிகளில்லாத காலத்தில் தாமாகவே படித்து இலண்டன் பீ ஏ. பரீட்சையிற் சித்தியெய்தி ஏனையோருக்கு ஓர் சிறந்த முன்மாதிரி காட்டி விளங்கிஞர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தெல்லிப்பழை மகாசனக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில்அவர் ஆசிரியராகக்கடமையாற்றிய காலத்தில அவரிடம்கற்ற மாணவர் அவருடைய ஆங்கில மொழியாட்சித் திறமையை மனமார வாயாரப் புகழுகின்றனர். அன்னுர் ஆங்கில இந்துசாதனத்தில் எழுதி வந்த பல கட்டுரைகளை வாசித்த எங்கள் வாசகர்களும் அன்னுரின் மொழியாட்சி, பொருளாட்சிஆதியவற்றின் திறனைப் புகழாமலிருக்க முடியாது. அவர் இறக்கும்பொழுது வயசு 65.

அன்னுர் ஆன்ம சாந்தியடையுமாறு இறைவன் திருவருள் புரிக.

# அந்தியகால அறிவித்தல்

—0—

யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்கம் லிமிற்ரெட்
இல: 4, கண்டிரேட், சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
பதிவு இல. M. 110

இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் அங்கத்தவர் தேகவியோகமடைந்தமையால் அன்னவர்க்காகச் செலுத்தவேண்டிய நன்கொடைப் பணத்தைத் தேகவியோகமடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குட் செலுத்தி விடவும். தவறின் பிரமாணம் 2 (2) ன் படி உரிமையை யிழக்கவேண்டி வரும்.

| காலகதியடைந்தவர் இலக். | பெயர் | விலாசம் | திகதி |
|---|---|---|---|
| 2669 | மு: கார்த்திகேசு | நயினுதீவு | 6-1-58 |

மேலும் 2367-ம் இலக்க அங்கத்தவரின் சாட்டுதலாளருக்கு நன்கொடைப் பணம் ரூபா 1475-25ம் சந்தாப்பணம் ரூபா 10-50 வழங்கப்பட்டது.

இங்ஙனம்
த. இராசரத்தினம்
கௌரவகாரியதரிசி, 6-1-58.

M197 3-1-58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மறைக் கழகம்

## அகில உலகத் தமிழ்மறைக் கட்டுரைப் போட்டி

**பரிசில்கள் பெறுவோர்**

இலங்கைத் தமிழ் மறைக் கழகம் நடத்திய அகில உலகத் தமிழ்மறைக் கட்டுரைப் போட்டியில் கலந்து பரிசில்களும், பாராட்டிதழ்களும் பெறுவோர் விபரங்களைக் கீழே காண்க.

இப்போட்டியிற் கலந்து கொள்வதற்கு இலங்கை, தமிழ்நாடு, வடஇந்தியா, மலாயா, பர்மா முதலிய நாடுகளிலிருந்து நூற்று அறுபது பேர் தங்கள் பெயர்களைப் பதிந்தார்கள். இவர்களிட மிருந்து கிடைத்த கட்டுரைகளைத் தமிழ் மறைக் நழகத்தலைவர் திரு. சா. பொ. இரத்தினம் அவர்கள வித்துவான் திரு. பொன். முத்துக்குமாரன், பண்டிதர் திரு அ. ஆறுமுகம், திரு. இராமலிங்கம என்போர் படித்து மதிப்பிட்டனர்.

முதலாம் பரிசில் ரூபா **100**

திரு. நா. தங்கவேலன் மதுரை, "திருவள்ளுவர் காலம்".

இரண்டாம் பரிசில் ரூபா **50**

திரு. க. குகதாசன், இறம்புக்பிட்டியா, "திருக்குறளில் நவரசங்கள்".

மூன்றும் பரிசில் ரூபா **25**

வித்துவான் மு வை. அபரஞ்சி, திருப்பத்தூர் "திருவள்ளுவமாலை".

பின்வருவோர் பாராட்டிதழ்கள் பெறுகின்றனர்:

பெயர்கள் அகரவரிசைப் படி எழுதப்பட்டுள.

1 திரு. அ. ச. அப்துல் சம்மது, அக்கரைப்பற்று, "பொதுமறை".

2 செல்வி. பொ. அரும்பொன், விராச்சிலை, "வாழ்வுக் கலை".

3 திரு. மு. இராமலிங்கம், மதுரை, "வள்ளுவர் வகுத்த இன்பம்'

4 திரு. த. சபாரத்தினம், யாழ்ப்பாணம், "தேடக் கிடைக்காத செல்வம்".

5 திரு. ரா. சாம்பசதாசிவம், கோயம்புத்தூர், "வள்ளுவர் வகுத்த அரசு".

6 செல்வி. சி. சிவபாக்கியம், அரியாலை, "திருவள்ளுவர் கண்ட பெண்மை".

7 திரு. நி. சு தியாகராசன், திருப்பதி, திருக்குறளும் சிலபதிகாரமும்".

8 திரு. சோ. பரமசாமி, இணுவில், "திருக்குறளும் கீதையும்".

9 திரு. வ பெருமாள், கொரடாச்சேரி, "நான் கண்ட வள்ளுவர்".

10 திரு அ. மாணிக்கவாசகன், மேலைச்சிவபுரி, "வாழ்க்கை நூல்".

12 திரு. மு. மோகனரங்கன், திருப்பதி, "வள்ளுவர் கண்ட பெண்மை".

12 திரு. ச. விவேகானந்தசாமி, குன்னூர், 'வள்ளுவரின் சொல்நயங்கள்'.

### அரசியல் அலை

=0=

1-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த விதமாக அந்தத் தனிச்சிங்களச் சட்டத்தின் அசம்பாவிதத்தைப்பற்றிச் சித்தம் தெளிவதற்கும் இடமிருக்கின்றதா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.


சைவபரிபாலன சபையார் வெளியிட்ட

**உபவாசகங்கள்**

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டன

**பால கதாவாசகம்**


( சித்திர விளக்கப் பதிப்பு )

ஆசிரியர்
பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

**பாலகதாவாசகம்**

நான்காம் புத்தகம் ... விலை சதம் 80
மூன்றும் புத்தகம் ... விலை சதம் 65
இரண்டாம் புத்தகம் (அச்சில்) „ „ 50
இலக்கிவ வாசகம் மூன்றும் புத்தகம் „
(அரிச்சந்திரன் கதையும் பஞ்சதந்திரச் செய்யுளும்) ... விலை சதம் 65







## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதடா

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 12—1—58—— 18—1—58. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

வாரத்தின் முதல் மூன்று நாட்களும் வியாபாரக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும். நீர் தனலாபமும் பெறுவீர். செவ்வாய் இரவு புதன், வியாழம் வெள்ளி காலை குழப்பமாயிருக்கும். வார இறுதி திரும்பவும் நன்ருகும்.

**இடபராசி கார்த்திகை 2, 3; 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

வழக்குகளுக்கும் கோளாறு செய்வோரால் தொந்தரவுகளுக்கும் இந்த வாரம் இடமுண்டு. தேவையில்லாமல் நீர் குற்றஞ் சாட்டப்படுவீர். குடும்பக் குழப்பங்களுக்கும் பண நெருக்கடிகளுக்கும் இடமுண்டு. வெள்ளியும் சனியும் எல்லாவற்றிலும் பழுதானவை.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

மனச்சமாதானத்துக்கிட முண்டு. எதிரிகள் அழிவும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம். ஆனல் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு பிள்ளைகளால் இன்பமுண்டாகும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

உமக்கு மனச்சமாதானமிருக்க மாட்டாது முரண்பாடுகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. குடும்பக கருமங்களும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டா. வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்,

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.**

உம்முடைய கந்தோரில் இந்த வாரம் சில தொந்தரவுகளுக்கிடமுண்டு. நண்பர் அதிகம் உதவியாயிருக்கமாட்டார்கள். சிறு அபாயங்களுக்கும் நணபர்கள் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கும் இடமுண்டு. முழு வாரத்தையும் கவனமாய்க் கழிக்கவும்

**கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். பழைய முதலீடுகள் நல்ல பலனைத் தரும் காணிப் பொருள்கள்மூலம் இலாபங்களும் சகோதர சகோதரிகள் மூலம் உதவிகளும் நிச்சயம். நீர் போதிய காசு உழைத்தாலும் செலவு அதிகரிக்கக்கூடும்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

மனச் சமாதானமிருக்க மாட்டாது குடும்பச் சூழலிற் சண்டைகளுக்கிடமுண்டு. கண்நோய்களுக்கிடமுண்டு இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உதவிப் பண்ணுவர்.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

தேகசுகம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. எந்த ஒரு சிக்கலையும் நீக்குவதில் நீர் வருத்தப்படுவீர். கருமங்கள் குழப்பமாயிருக்கும், அன்னியர் உமக்கு அதிகம் உதவிசெய்வர்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

ஒரு நல்ல வாரம் உம்முடைய தேகசுகத்தில் சிறிதுதிருத்தமிருக்கும். ஆயினும் அது விரும்பத்தக்களவுக்குத் திருந்த வில்லை பணத்துறையில் மிகநல்லவாரம். புகழும் சமுக சித்தியும் நிச்சயம்,

**மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் சில சொந்தச்சிக்கல்களை நீர் கையாளக்கூடியதாயிருக்கும். பிழை எண்ணங்கள் நீக்கப்படும், நீர் போதிய காசு உழைப்பீர். ஆனல் மிச்சமிருக்க மாட்டாது.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

தனலாபம் நிச்சயம், நண்பர் அதிக உதவியாயிருப்பர். புகழும் வழக்கில் வெற்றியும் நிச்சயம். முதல்நாள் உமக்குச் சிறிதுகோபமுண்டாக்கக்கூடும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

ஞாயிறு இரவு திங்கள் செவ்வாய் உம்மை அதிகம் நிலை குலைக்கும். குடும்பக் குழப்பங்களும் பிதாவழி இனத்தவர் மூலம் தொந்தரவுகளும் உண்டாகக் கூடும். நண்பர் விசேடமாகப் பெண்ணின் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.


யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாபநிதி**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றததக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்து கொள்ளலாம்

**S. கனகசபை**

Std 14 சிறுப்பர்



யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும்திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 10-1-58 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org